# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ     அதிவிசேஷமானது

අංක 1787/37 - 2012 දෙසැම්බර් 07 වැනි සිකුරාදා - 2012.12.07

***1787/37 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

**(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : ஹாப/சங்/2/காள/82.
காணி, காணி அபி. அமை. குறிப்பு இல. : 4/3/3/2011/
டபிள்யூஎஸ்/36.

கண்டி மற்றும் அருகாமையிலுள்ள நீர் விநியோகத்திட்டத்தின் கட்டுகஸ்தொட்டை நீர் சுத்திகரிப்புத் தொகுதியைப் புனரமைப்பதற்குத் தேவைப்படும் கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதைக் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில், குலுகம்மன சியபத்துவ எனும் சிறு பிரிவில், கொண்டதெனிய கிராமத்தில் அமைந்துள்ள, கண்டி மாவட்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட முதற் சுவட்டு வரைபட இல. மஹ/5398, 0.0420 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க் காட்டப்பட்டுள்ள காணித் துண்டின் விபரம் :

**01. துண்டு இல. 31**
காணியின் பெயர் : திங்கிரியாதெனிய ; உரிமை கோருபவர் : வலல ரஜமஹா விஹாரை ; விஸ்தீரணம் : 0.0420 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர். எம். பீ. எஸ். பீ. ரத்னாயக்க,
பிரதேச செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
நுகவெல, ஹாரிஸ்பத்துவ,
2012.11.19.

12-618

---

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமை. குறிப்பு இல. : 95/டபிள்யூஎஸ்/325.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

கண்டி மாவட்டத்தில், ஹத்தரலியத்த பிரதேச செயலாளர் பிரிவில், கங்அட்ட பளாத்த சிறு பிரிவில், வெலிவிட்ட இஹலகம கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இ. கி. வ. இல. 164, மேலதிக துண்டு இல. 817 எனக் காட்டப்பட்டுள்ள 0.0379 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட பின்ஹேன என அழைக்கப்படும் காணித் துண்டின் விபரம் :

**01. துண்டு இல. 01**
காணியின் பெயர் : பின்ஹேன ; உரிமை கோருபவர் : வல்பொல சத்தானந்த ஹிமி, மினிகமுவ புராண விஹாரய, மினிகமுவ, கலகெதர ; விஸ்தீரணம் : 0.0379 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு ஹத்தரலியத்த பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

பிரதேச செயலாளர்,
ஹத்தரலியத்த.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
ஹத்தரலியத்த,
2012.11.29.

12-619

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : அம்பகோ/3/1/அ/142.
காணி , காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு இல. :
எல்டீ/05/2009/டபிள்யூஎஸ்/126.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மத்திய மாகாணத்தில், நுவரெலியா மாவட்டத்தில், அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், அம்பகமுவ கோரளை சிறு பிரிவில், பிரவுன்ஸ்வீக் தோட்டம் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2012.09.28 ஆந் திகதிய நு. 2815 இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தில், துண்டு இல. 1, 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ள "பிரவுன்ஸ்வீக் தோட்டம்" என்னும் காணியில் சுமார் 0.1033 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித் துண்டுகள் இரண்டு :

01. **துண்டு இல. 01**
காணியின் பெயர் : பிரவுன்ஸ்வீக் வத்த ; உரிமை கோருபவர் : மஸ்கெலியா பயிர்ச்செய்கைக் கம்பனி, இல. 310, ஹைலெவல் வீதி, நாவின்ன, மஹரகம ; விஸ்தீரணம் : 0.0453 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 02**
காணியின் பெயர் : பிரவுன்ஸ்வீக் வத்த ; உரிமை கோருபவர் : மஸ்கெலியா பயிர்ச்செய்கைக் கம்பனி, இல. 310, ஹைலெவல் வீதி, நாவின்ன, மஹரகம ; விஸ்தீரணம் : 0.0580 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அம்பகமுவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

எச். எம். சீ. கே. ஹேரத்,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை,
கினிகத்ஹேன.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அம்பகமுவ கோரளை,
கினிகத்ஹேன,
2012.12.04.

12-646

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.